இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 249 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 06 – சனிக்கிழமை 19 ஏப்ரல் 2025 – வெளியீடு 16 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 249 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 06 - Saturday 19 April 2025 - Dak 16 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளின்

# அகில இந்திய முகம் தி.மு.க.!

## திருவள்ளூர் அரசு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருவள்ளூர், ஏப்.19-**

**திருவள்ளூர் மாட்டம் - பொன்னேரி - ஆண்டார் குப்பத்தில், நேற்று காலை பிரம்மாண்டமாக நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மாநில உரிமைகளின் அகில இந்திய முகம் தி.மு.க." என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.4.2025) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, ஆண்டார்குப்பத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டின் நுழைவு வாயிலும், புனித ஜார்ஜ் கோட்டைக்கு பாதை அமைத்த மாவட்டமுமான இந்த திருவள்ளூர் மாவட்டத்துக்கு உட்பட்டிருக்கக் கூடிய பொன்னேரியில் நடைபெறக்கூடிய அரசு விழாவில் பங்கெடுத்து உரையாற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரசு விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற மாவட்டத்தின் அமைச்சர், நான் வளர்த்த இளைஞர் அணியில் வளர்ந்த ஆருயிர்ச் சகோதரர் மாண்புமிகு ஆவடி நாசர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் பிரதாப் அவர்களுக்கும், அவர்களுக்குத் துணை நின்ற அரசு அலுவலர்கள் அத்தனை பேருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

### வருகிற வழியெல்லாம் வரவேற்பு நிகழ்ச்சிகள் – அமைச்சர் நாசர் ஏற்பாடு!

முதலில், என்னுடைய வருத்தத்தை நான் உங்களிடத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த நிகழ்ச்சிக்கு நான் கொஞ்சம் தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறேன். அதற்கு நான் காரணம் அல்ல - அதற்கு நாசர்தான் காரணம்.

### நவீன தமிழ்நாட்டின் சிற்பி – முத்தமிழறிஞர் கலைஞர்!

வருகின்ற வழியெல்லாம் வரவேற்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, அவர் செய்த ஏற்பாடு மட்டுமல்ல, அதையும் தாண்டி, அதையும் மீறி, ஆங்காங்கே திரண்டிருந்து வரவேற்றிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளை எல்லாம் முடித்துவிட்டு இந்த இடத்திற்கு வந்து சேருவதற்கு தாமதமாகி விட்டது. தாமதமாக வந்த காரணத்தினால்தான், இங்கே வந்திருக்கக்கூடிய அனைவரும் பேச முடியாமல், அவர்கள் அத்தனை பேரின் சார்பில் நான் ஒருவனே பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்று, ஏற்கனவே காலங்கடந்து வந்திருக்கக்கூடிய நேரத்தில் நீங்கள் காத்திருக்கக் கூடிய இந்தச் சூழ்நிலையில், இன்னும் உங்கள் பொறுமையைச் சோதிக்க நான் விரும்பாத காரணத்தால், நான் ஒருவனே, அதுவும் சுருக்கமாக உங்களிடத்தில் உரையாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர்தான் 'நவீன தமிழ்நாட்டின் சிற்பி'! அதற்கு அடையாளமாக விளங்குகின்ற இடம்தான் இந்த திருவள்ளூர் மாவட்டமும், அதனுடைய சுற்றுப்புறங்களும்! எப்படி என்று கேட்கிறீர்களா?

### கார் தொழிற்சாலைகளில் தொடங்கி கண்ணாடி தொழிற்சாலைகள் வரை...!

மணலி, அம்பத்தூர், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, மறைமலை நகர் என்று திருவள்ளூர், சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய தொழில் வளாகங்கள் எல்லாமே முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டவைதான்! அதுதான், இந்தப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் வழங்கி, அவர்களும், அவர்களது குடும்பங்களும், பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது!

கார் உற்பத்தி தொழிற்சாலைகளில் தொடங்கி, கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலைகள் வரை எல்லாம் தலைவர் கலைஞர் காலத்தில் தொடங்கப்பட்டவைதான்.

உலோகத் தகடு முதல் ஏர் கண்டிஷன் வரை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் கழக ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டவைதான். கடந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டுமே, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், உங்கள் திருவள்ளூர் மாவட்டத்துக்கு எவ்வளவோ பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அதையெல்லாம் முழுவதுமாகப் பட்டியலிட்டால், இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் தேவைப்படும். அதனால், சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாக நான் சொல்ல விரும்புகிறேன்.

- எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அனல்மின் நிலையப் பணிகள் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை மெட்ரோ பணிகள் இப்போது பட்டாபிராம் வரை நீட்டித்துத் தரப்பட்டிருக்கிறது.
- குத்தம்பாக்கத்தில், புதிய பேருந்து முனையம்
- திருத்தணியில், புதிய பேருந்து நிலையம்
- திருவள்ளூரில், புதிய பேருந்து நிலையம்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

